# செங்கைஆழியான் எண்ணிமப்படுத்தல் செயற்றிட்டம்
# 2016

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | செங்கை ஆழியான் எண்ணிமப்படுத்தல். |
| செயற்றிட்ட எண் | NF/PG/2016/0007 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம், இலங்கை. |
| செயற்றிட்ட காலம் | 2016 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | செங்கை ஆழியான் அவரது குடும்பத்தினர், கள ஆய்வாளர்கள், நூலக நிறுவனம் |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

இச் செயற்றிட்டமானது ஈழத்தின் மூத்த ஆளுமையான செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் நன்கறியப்படும் கந்தையா குணராசாவின் ஆவணங்களை எண்ணிமப்படுத்தலை நோக்கமாகக் கொண்டது. க.குணராசா ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவராவார். புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் பொதுஅறிவு நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் தடம் பதித்தவர். அவரது ஆவணங்களையும், அவரது சேகரிப்புக்களையும் ஆவணப்படுத்தலின் முக்கியம் கருதி இச்செயற்றிட்டம் 2016 இல் மேற்கொள்ளப்பட்டது.

## அறிமுகமும் பின்புலமும்

செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் க. குணராசா (1941.01.25 - 2016.02.28) மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழுத்தாளராவார். புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் க. குணராசாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். நீலவண்ணன் உள்ளிட்ட வேறு புனைபெயர்களிலும் இவர் எழுதியுள்ளார்.

செங்கை ஆழியானின் இலக்கியச் செயற்பாடுகள், அவரது ஆவணப்படுத்தல் முயற்சிகள் மிக முக்கியமானவை. அவை காலங்கடந்தும் பேசத்தக்கவை. இவ்வகையான ஆவணப்படுத்தல்கள், வரலாற்று ஆய்வுகளின் முக்கியம் அதிகமானதாக இன்று உணரப்படுகையில் அவற்றை ஆவணப்படுத்தலும்

முக்கியமானதாகும். மாணவர் சமூகத்திற்கு அவரின் ஆக்கங்கள் அதிகளவுக்கு உசாத்துணை நூல்களாக உதவிக் கொண்டிருக்கின்றன. அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் தனக்கென தனித்துவமான இடத்தை பிடித்திருந்த செங்கை ஆழியான் அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஒரு இடத்தைத்தக்க வைத்திருந்தார். ஈழத்தில் பிறந்ததாலோ என்னவோ இவரது இலக்கிய வாழ்வு ஒரு வட்டத்தை விட்டு வெளிவராமலே அடங்கிப் போயிற்று. வரலாற்று நாவல்கள், நகைச்சுவை நாவல்கள், சாதிய நாவல்கள், புலம் பெயர் நாவல்கள், அரசியல் நாவல்கள், தமிழ் தேசிய இன நாவல்கள், போர்க்கால நாவல்கள் என 34 நாவல்களை எழுதி சாகித்திய ரத்னா, சாகித்திய விருது உட்பட பல விருதுகளை வென்றவர். அவரது ஆவணங்களை நூலகம் நிறுவனம் எண்ணிமப்படுத்துவதற்காக இச் செயற்றிட்டத்தை 2016 இல் மேற்கொண்டது. செயற்றிட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அவர் துரதிஸ்டவசமாக மண்ணுலகை விட்டு நீங்தார். இருப்பினும் அதிகமான ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டன.

## இலக்குகளும் நோக்கங்களும்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களை ஆவணப்படுத்தலும் அவர்களது வெளியீடுகளை எண்ணிமப்படுத்ததலும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செங்கை ஆழியானின் அனைத்து ஆவணங்களையும் ஆவணப்படுத்தலை இலக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## செயற்பாடுகள்

- ஆவணங்கள் பற்றியும், நூலக நிறுவனம் பற்றியும், இச் செயற்றிட்டம் பற்றியும் கலந்துரையாடல்.
- செங்கை ஆழியான் குடும்பத்தினரிடம் ஆவணங்களைப் பெற்று எண்ணிமப்படுத்தல்.
- அவர்களிடம் கிடைக்காத செங்கை ஆழியான் படைப்புக்களை நூலகங்களிலும் வேறு சேகரிப்பாளர்களிடமும் பெற்று ஆவணப்படுத்தல்.
- ஆவணங்களை மீள ஒப்படைத்தல்.

## அடைவுகள்

- செங்கை ஆழியானின் ஏற்கனவே நூலகத்தில் இருந்த ஆவணங்களுடன் சேர்த்து மொத்தமாக 171 ஆவணங்கள் மின்வருடப்பட்டு நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.
- செங்கை ஆழியானின் துணைவியும் எழுத்தாளருமான கமலா குணராசா அவர்களின் 2 மணித்தியாலம் 45 நிமிடங்கள் நீண்ட வாய்மொழி வரலாறு பதிவு செய்யப்பட்டது. இந்த வாய்மொழி வரலாற்றில் செங்கை ஆழியானின் வாழ்வு, பணிகள் தொடர்பான பல்வேறு விபரங்களும் பதிவாகின.
- செங்கை ஆழியான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட நுண் அறிவியல் சஞ்சிகையின் 14 இதழ்களும் (1998-2001) புவியியல் சஞ்சிகையின் 9 இதழ்களும் (1964-67, 1989) நூலக வலைத்தளத்தில் ஆவணப்படுத்தப்பட்டன.
- செங்கை ஆழியான் இணையாசிரியராக இருந்த விவேகி சஞ்சிகையின் 13 இதழ்கள் ஆவணப்படுத்தப்பட்டன.
- செங்கை ஆழியானின் புகைப்படங்கள், சான்றிதழ்கள் ஆவணப்படுத்தப்பட்டன
- சொந்த ஆவணங்கள் தவிர்ந்த அவரிடமிருந்த தேன்மொழி, ஈழநாடு, சிரித்திரன், மறுமலர்ச்சி போன்ற சஞ்சிகைகளும் வேறு பல நூல்களும் ஆவணப்படுத்தப்பட்டன.
- செங்கை ஆழியான் குடும்பத்தினர் தமது சேகரிப்பிலிருந்த ஒரு தொகை ஆவணங்களை நூலக நிறுவனத்துக்கு அன்பளிப்புச் செய்தனர்.

- நூல்கள், நூல் விபரங்கள், வாய்மொழி வரலாறு, வானொலி நிகழ்ச்சி, புகைப்படங்கள், சான்றிதழ்கள், தட்டச்சுப் பிரதிகள் உள்ளிட்ட 200க்கும் அதிகமான ஆவணங்களை உள்ளடக்கியதாக செங்கை ஆழியான் சேகரம் ஆவணகம் வலைத்தளத்தில் உருவாக்கப்பட்டது.

### எதிர்கொண்ட சவால்கள்

- செயற்றிட்ட ஆரம்பத்தில் போதிய மனித வளங்கள் இல்லாமையால் விரைவாகச் செயற்றிட்டத்தினை முன்னெடுக்க முடியவில்லை.
- செங்கை ஆழியான் சரளமாக உரையாட அவரது உடல்நிலை இடமளிக்காததால் அவரது வாய்மொழி வரலாறு பதிவு செய்யப்படவில்லை.
- செயற்றிட்டக் காலத்தில் செங்கை ஆழியான் காலமானதால் செயற்றிட்டம் தாமதமானது.
- அவர் வெளியிட்ட சில நூல்கள், பல சஞ்சிகைகள் கிடைக்கவில்லை. போர்க்காலத்திலும் 2008 அளவில் ஏற்பட்ட மழை அனர்த்தத்தில் அவரது தனிப்பட்ட சேகரத்தில் பல ஆவணங்கள் அழிந்திருந்தமையும் இதற்கான காரணம் ஆகும்.

### கற்றல்களும் பரிந்துரைகளும்

- 2007இல் இருந்து செங்கை ஆழியான் நூலக நிறுவனத்துடன் தொடர்பில் இருந்துள்ளதுடன் ஆலோசனைக்குழுவிலும் இருந்துள்ளார். அவரை ஆவணப்படுத்த தவறியுள்ளோம். ஆளுமைகளை அவர்கள் ஆரோக்கியமாக இருக்கும் காலத்திலேயே ஆவணப்படுத்த வேண்டும்.
- கிடைக்காத நூல்கள், சஞ்சிகைகளை எதிர்காலத்தில் படிப்படியாகப் பெற்று ஆவணப்படுத்த வேண்டும்.
- செங்கை ஆழியானின் வாழ்வு, பணிகள் தொடர்பான ஆவணம் ஒன்று தயாரிக்கப்படுவது நல்லது.
- செங்கை ஆழியானது நூல்களது விபரங்கள் அடங்கிய நூல் விபரப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.
- செங்கை ஆழியானுடன் தொடர்பிலிருந்த எழுத்தாளர்கள், வாசகர்களிடமிருந்து அவரைப் பற்றிய மனப்பதிவுகள் ஒலிப்பதிவு செய்யப்படலாம்.